# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 131 /பேரூ/2026**
**நாள் : 05.08 .2026**

L. பாலமுரளி,
மேட்டூர் அணை,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை - 3, இராமன் நகர் அஞ்சல், 5/2-57B, முருகன் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. L. பாலமுரளி என்பவரது 15.05.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.05.2026 அன்று பெறப்பட்டு, 131/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, இராமன்நகர் அஞ்சல், 5/2-57B, முருகன் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. L. பாலமுரளி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் தெரு விளக்குகளை (Street Lights) பராமரிக்க 2023 ஜூலை முதல் M/s. LED GEO LIGHT PVT Ltd., பாண்டிச்சேரி என்ற நிறுவனத்திற்கு 10 ஆண்டு காலத்திற்கு பராமரிப்பு செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பேரூராட்சியில் தெரு விளக்குகள் பராமரிப்புக்கு பொருட்களை பேரூராட்சியில் செலவில் வாங்கியதாக மாதாமாதம் பல இலட்ச ரூபாய் தொகையை எடுத்துள்ளனர்.

ஐயா அவர்கள் இதனை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.05.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 16.06.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 97/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 15 வார்டு பகுதிகளிலும் 1,375 தெருமின் விளக்குகள் இப்பேரூராட்சியின் பராமரிப்பில் இருந்து வந்தது. இதில் 980 தெருமின் விளக்குகளை LED தெருமின்விளக்குகளாக மாற்றம் செய்து பராமரிக்கும் பணியை 05.06.2023 முதல் 10 ஆண்டுகள் வரை புதுச்சேரியை சார்ந்த LED GEO LIGHTS PVT LTD என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் 20w கொண்ட 247 LED தெருமின்விளக்குகள், 60w கொண்ட 127 LED தெரு மின்விளக்குகள் மற்றும் 200w கொண்ட 21 உயர்மின் கோபுர LED தெரு மின்விளக்குகள் என மொத்தம் 395 தெரு மின்விளக்குகள் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ளது.

மேலும் பேரூராட்சி அலுவலக கட்டிடம் 1, மன்றகூட்ட அறை 1, சமுதாயகூட கட்டிடம் 1, சிறுவர் பூங்கா -3, மேல்நிலை தொட்டிகள் 7, தரைமட்ட தொட்டிகள் 5, பொது கழிப்பிடம் 6, வளமீட்பு பூங்கா 1 ஆகியவையும் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ளது.

இப்பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ள தெரு மின்விளக்குகள், மின்விசிறிகள், மின்மோட்டார்கள் மற்றும் இயந்திரங்கள் பின்வருமாறு பராமரிக்கப்படுகிறது.

1. தெரு மின்விளக்குகளில் பழுது ஏற்பட்டால் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து அதனை உடனடியாக சரி செய்யப்படுகிறது.

2. பேரூராட்சி அலுவலக கட்டிடம் 1, மன்றகூட்ட அறை 1, சமுதாய கட்டிடம் 1, பொது கழிப்பிடம் 6, சிறுவர்பூங்கா 3 ஆகியவற்றில் உள்ள மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகளில் பழுது ஏற்பட்டால் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து அதனை உடனடியாக சரி செய்யப்படுகிறது.

3. மேல்நிலை தொட்டிகள் 7, தரைமட்ட தொட்டிகள் 5 ஆகியவற்றில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் மின்விளக்குகளில் பழுது ஏற்பட்டால் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து அதனை உடனடியாக சரி செய்யப்படுகிறது.

4. வளமீட்பு பூங்காவில் உள்ள இயந்திரங்கள் மற்றும் மின்விளக்குகளில் பழுது ஏற்பட்டால் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து அதனை உடனடியாக சரி செய்யப்படுகிறது.

மேற்படி பணிகளுக்கு மட்டுமே இப்பேரூராட்சியின் மூலம் மின் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்து மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்படுகிறது. இதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை. மனுதாரரான திரு. L. பாலமுரளி என்பவர் இப்பேரூராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தொடர்ந்து பல்வேறு பொய் புகார்களை அளித்து வருகிறார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 07.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராகுமாறு 19.06.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 07.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "நான் சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சி மன்ற 7வது வார்டு உறுப்பினராக உள்ளேன்.
- சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட தெருக்களில் தற்போதுள்ள மின் விளக்குகளை மாற்றி LED விளக்குகளாக மாற்றி பொருத்திடவும் மற்றும் மின் விளக்குகளை பராமரிக்கவும் பேரூராட்சியானது புதுச்சேரியிலுள்ள M/s LED Geo Pvt. Ltd., என்ற நிறுவனத்துடன் 20.04.2023 முதல் 10 வருட காலத்திற்கு ரூ.50.54 இலட்சம் செலவினத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- மொத்தமுள்ள 1,375 தெருவிளக்குகளில் 980 தெரு மின்விளக்குகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 395 தெருமின்விளக்குகளுக்கு மின்பகிர்மான துறை மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என்ற நிலையில், பேரூராட்சி தன்னிச்சையாக மேற்காணும் 395 தெருவிளக்குகள் விதிமீறி முறைகேடாக பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இதற்கான தீர்மானம் ஏதும் பேரூராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை.
- இந்நிலையில் 20.04.2023 முதல் இந்நாள்வரை பேரூராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்புக்கான பொருட்களை வெளிச்சந்தை மூலம் மாதா மாதம் பல இலட்சம் ரூபாய் செலவினத்தில் முறைகேடாக மின்சாதன பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
- எனவே முறைகேடான கொள்முதல் மூலம் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோர் 07.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- "சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 15 வார்டு பகுதிகளில் மொத்தம் 1,375 தெருமின்விளக்குகள் இப்பேரூராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மொத்தமுள்ள 1.375 தெருவிளக்குகளில் 980 தெரு மின்விளக்குகளை LED தெரு மின்விளக்குகளாக மாற்றம் செய்து பராமரிக்கும் பணியை புதுச்சேரியை சேர்ந்த LEO Geo Lights Pvt. Ltd. என்ற நிறுவனத்துடன் 05.06.2023 முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டது.

- மொத்தமுள்ள 1.375 தெரு மின்விளக்குகளில் மேற்காணும் நிறுவனத்தின் பராமரிப்பிலுள்ள **980** தெரு மின்விளக்குகள் போக மீதமுள்ள **395** LED கொண்ட தெருமின்விளக்குகள் மற்றும் பேரூராட்சி அலுவலகத்திலுள்ள **25** மின்விளக்குகளிலும் இப்பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ளது.

- மேற்காணும் இப்பேரூராட்சியால் பராமரிக்கப்படும் 395 LED தெரு மின்விளக்குகள் மற்றும் பேரூராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள 25 மின் விளக்குகளில் பழுது ஏற்பட்டால் உதிரிபாகங்கள் கொள்முதல் செய்து உடனடியாக சரி செய்யப்படுகிறது.

- மேற்காணும் மின் உதிரி பாகங்களுக்கான கொள்முதல் செய்வதற்கு பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு தெருவிளக்கு மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்கான செலவினங்கள் மற்றும் வாங்குவதற்கும் செலவு மேற்கொண்டதற்கும் பேரூராட்சி மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில் மனுதாரரும் மற்றும் 7வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினருமான திரு. L. பாலமுரளி என்பவரும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து கையொப்பமிட்டுள்ளார் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

- மனுதாரர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யான புகாரை தெரிவித்துள்ளார். மின் உதிரி பாகங்கள் கொள்முதல் மேற்கொண்டதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் அமைந்துள்ள மொத்த **1375** தெருவிளக்குகளில் **980** தெரு மின்விளக்குகளை பராமரிக்கப்படுவது தொடர்பாக புதுச்சேரியிலுள்ள M/s. LED Geo Pvt. Ltd. என்ற நிறுவனத்துடன் **20.04.2023** முதல் **10** ஆண்டுகளுக்கு ரூ.**50.54** இலட்சம் செலவினத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது எனவும், மீதமுள்ள **395** தெரு மின்விளக்குகளை மின்பகிர்மான துறை மூலம் பராமரிக்கப்பட வேண்டிய நிலையில், பேரூராட்சி நிர்வாகமானது தன்னிச்சையாக, பேரூராட்சி மன்ற தீர்மானமின்றி, **20.04.2023** முதல் ஒவ்வொரு மாதமும் பல இலட்சம் ரூபாய் செலவினத்தில் முறைகேடாக மின்சாதன பொருட்கள் கொள்முதல் செய்கின்றனர் என புகார் தெரிவித்திருப்பதை மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேற்காணும் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் **395** LED தெரு மின்விளக்குகள் மற்றும் பேரூராட்சி அலுவலகத்திலுள்ள **25** மின்விளக்குகளும் வீரக்கல்புதூர் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ளது எனவும், இந்த மின் விளக்குகளுக்கான உதிரி பாகங்கள் மற்றும் மின்விளக்குகள் கொள்முதல் செய்வதற்கு பேரூராட்சி மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது எனவும், இதில் மனுதாரரும் 7வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினருமான திரு. L. பாலமுரளி என்பவரும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்து கையொப்பமிட்டுள்ளார் எனவும், எனவே தெரு மின்விளக்குகள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், வீரக்கல்புதூர் பேரூராட்சியில் 395 தெரு மின் விளக்குகளுக்கு பேரூராட்சியால் மேற்கொள்ளப்படும் செலவினத்தில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில், உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கை குழு மூலம் தணிக்கை செய்து அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்றம் நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. L. பாலமுரளி,
5/2-57B, முருகன் நகர், இராமன் நகர் அஞ்சல்,
மேட்டூர் அணை, சேலம் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
3. இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை,
571, அணணாசாலை, நந்தனம், சென்னை-35.
4. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/8/26
செயலாளர்

சென்னை–600 032